**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

OS 132/2021

18.07.2025

**<u>வா.சா.1 சங்கர்கணேஷ் த/பெ. ராமச்சந்திரன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u> :-**

பிரதிவாதிக்கு நான் ரூ. 5,00,000 ரொக்கமாக கொடுத்தேன். 500 ரூபாய் கட்டுகள் 10 கொடுத்தேன். பிரதிவாதியின் டீ கடையில் வைத்து அந்த 5 லட்சத்தை கொடுத்தேன். நான் பணம் கொடுத்த விபரம் ஸ்ரீதரனுக்கு தெரியும். டீ கடையில் நிறைய நபர்கள் இருந்தார்கள் அங்கு என்னோடு ஸ்ரீதரனும் இருந்தார். ஸ்ரீ தருக்கு மட்டும் தான் நான் ரூ. 5 லட்சம் கடன் கொடுத்த விபரம் தெரியும். ரூ 5 லட்சம் பணத்தை கடைக்கு பின்புறம் வைத்து ஸ்ரீதரன் முன்னிலையில் கொடுத்தேன். ஸ்ரீதரனுக்கு பிரதிவாதி கடன் கேட்டது தெரியாது நான் கைமாற்றாக ரூ 5 லட்சம் பணம் கொடுத்தது தெரியும். ஸ்ரீதரனுக்கு மற்ற விபரங்கள் தெரியாது. ரூ. 5 லட்சம் ரொக்கமாக என் உறவினர் உதயகுமார் என்பவரிடமிருந்து வாங்கிகொடுத்தேன். உதயகுமார் எனக்கு ரூ. 5 லட்சத்தை கொடுத்தார் என்றால் நான் ரூ 2 லட்சம் கையில் வைத்திருந்தேன். ரூ. 3 லட்சம் ரூபாய் மட்டும் உதயகுமாரிடமிருந்து வாங்கினேன். அந்த உதயகுமாரை சாட்சியாக நீதிமன்றத்தில் விசாரிக்கமுடியுமா என்றால் அவர் வெளிநாட்டில் உள்ளார். அவர் வெளிநாட்டில் தான் இருக்கிறார் என்பதற்கு ஆதாரங்கள் தாக்கல் செய்யமுடியும். நான் பிரதிவாதிக்கு ரூ. 5 லட்சம் பணமே கொடுக்கவில்லை என்றும் டீ கடையில் பலநபர்கள் இருந்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் ஸ்ரீ தரன் என் நண்பர் என்பதால் அவருக்கு மட்டும் தான் தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் உதயகுமாரிமிருந்து ரூ3 லட்சம் பணமே வாங்கவில்லை என்றாலும் வழக்கிற்காக உதயகுமாரிமிருந்து கைமாற்றாக ரூ. 3 லட்சம் வாங்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உதயக்குமாரை அழைத்து விசாரித்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதற்காக தான் அவர் வெளிநாட்டில் இருந்துவருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி ரூ. 5 லட்சம் பணத்தை எண்ணிப்பார்த்தாரா என்றால் கட்டை மட்டும் பார்த்து எண்ணிவாங்கி கொண்டார் ஒவ்வொறு கட்டையும் தனித்தனியாக பிரித்து எண்ணவில்லை. பணத்தை கொடுத்துவிட்டு நானும் ஸ்ரீதரனும் வந்துவிட்டோம். பணம் 12.01.2019 காலை 11.00 மணியளவில் கொடுத்தேன். பிரதிவாதி கைமாற்றாக பணத்தை வாங்கிகொண்டு எத்தனை மாதத்தில் திருப்பிதருவதாக சொன்னார் என்றால் 2 , 3 மாதத்தில் திருப்பி தருவதாக சொன்னார். ரூ 5 லட்சம் பணத்தையும் அப்படியே திருப்பி தருவதாக சொன்னார். வழக்கில் தாக்கல் செய்துள்ள புரோநோட்டு எப்போது எங்கு வைத்து கொடுத்தார் என்றால் பணம் வாங்கிய அன்றே அதே கடையில் வைத்து கொடுத்தார். புரோநோட்டை பிரதிவாதியே பூர்த்தி செய்து வைத்திருந்தார். அதை என்னிடம் கொடுத்தார் யார் புரோநோட்டை பூர்த்தி செய்தது

என்று எனக்கு தெரியாது. புரோநோட்டில் கையெழுத்து பிரதிவாதி என்முன்னிலையில் போட்டார் , ஸ்ரீ தரன் ஒரு சாட்சி கையெழுத்து போட்டார் மற்றொரு சாட்சி யார் என்று எனக்கு தெரியாது. மற்றோரு சாட்சிக்கு நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்த விபரம் தெரியாது என்றால் சரிதான். புரோநோட்டை கொடுக்கும்போது 5 லட்சத்தை 3 மாதத்திற்குள் திருப்பி தந்துவிடுவதாக தான் புரோநோட்டை எழுதிக்கொடுத்தார். ஆனால் அந்த புரோநோட்டில் கைமாற்று என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 யை பிரதிவாதி எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும் நான் எனக்கு வேண்டிய நபர்களை வைத்து புரோநோட்டை பூர்த்தி செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. புரோநோட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதி கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கையொப்பத்தை ஒப்பிட்டு பார்க்க தடயஅறிவியல் துறைக்கு புரோநோட்டை அனுப்புவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. பிரதிவாதி மீது ரூ. 5 லட்சம் பணத்தை மீட்டு கொடுக்கும்படி கூத்தாநல்லூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரிதான். அந்த புகாரின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த புகார் மனுரசீதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் கொடுத்த புகாரில் போலீசார் 2020 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பிரதிவாதியை விசாரித்தார்கள் தேதி நினைவில்லை. அப்போது பிரதிவாதி போலீசாரிடம் பணம் வாங்கவில்லை என்றார். அப்போது போலீசாரிடம் புரோநோட்டை காண்பித்து இதுதான் பிரதிவாதி எழுதிக்கொடுத்த புரோநோட்டு என்றேன். புகாரில் பிரதிவாதி பணம் வாங்கியது அதைதராமல் ஏமாற்றியது என அனைத்தையும் சொல்லியுள்ளேன். பிரதிவாதியின் அண்ணன் வெளிநாட்டில் இருந்தார் என்றால் இல்லை. என்னுடைய தம்பி உதயகுமார் தான் வெளிநாட்டில் இருந்தார். பிரதிவாதியின் அண்ணனும் உதயகுமாரும் வெளிநாட்டில் இருந்தபோது அவர்களுக்குள் பணபரிமாற்றம் நடந்து என்றாலும் ஊருக்கு வந்த பிரதிவாதியின் சகோதரர் இறந்துவிட்டதால் அவரிடமிருந்து வரவேண்டிய பணத்திற்காக உதயகுமார் என் மூலமாக மோசடியாக புரோநோட்டு தயாரித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் ஜனவரி மாதம் பணம் கொடுத்தேன் அதன்பின்பு 3 மாதத்திற்குள் பணம் தராததற்கு சட்ட அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை பலமுறை கேட்டேன் தரவில்லை. பிரதிவாதி எனக்கு ரூ. 5 லட்சம் பணம் தராமல் நாள்கடத்தி வந்தது யாருக்கு தெரியும் என்றால் ஸ்ரீதரனுக்கு தான் தெரியும். நான் ரூ. 5 லட்சம் பணம் பிரதிவாதிக்கு கொடுத்தது என் மனைவி மங்கையர்கரசிக்கு தெரியுமா என்றால் தெரியும் என் மனைவியை இந்த நீதிமன்றத்தில் விசாரிக்கலாமா என்றால் விசாரிக்கலாம். பிரதிவாதி என்னிடம் ரூ. 5 லட்சம்

பணம் பெறவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் உதயகுமார் சொல்லி பிரதிவாதியின் இறந்துபோன அண்ணனிடமிருந்து வரவேண்டிய தொகைக்கு உதயகுமார் புரோநோட்டு தயார் செய்து என்மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.

சார்பு நீதிபதி,

மன்னார்குடி